சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

VOL-IX.	DECEMBER.	No - 5.
தொகுதி-௯.	டிசம்பர் 1913.	பகுதி - 5.

பொருடனைப் போற்றிவாழ்.

பொருள் தன்னைப் பாதுகாப்பவனைத் தான் பாதுகாப்பதாக விருத்தலின், தாம்தேடிய பொருளையாவது தம்முன்னோர் தேடிவைத்த பொருளையாவது மிகுவிழிப்பாகப் பாதுகாத்து வருபவர்தாம் உலகநோக்கில் பெரும்பான்மையும் வருத்த மிலாது வாழ்வார்கள். காட்டில் வசிக்கு மியல்புடைய புலிசிங்கமுத லியவற்றை அவை வசிக்குங்காடு மிகு அடர்த்தியாக விருக்குமாயின், வேட்டைக்காரர் முதலியோர் துணிந்து சென்று கொல்லுவதற்கு மிகவு மஞ்சுவர். இதனால் காடு மிகுஅடர்த்தியாயிருப்பதே அவை கொல்லப்படா திருப்பதற்குக் காரணமாமென்பது விளங்குமன்றோ? அங்ஙனமே ஒருவன் பொருளை மிகுதியாக வுடையவனாக விருப்பானாயின், அவனை அவனது விரோதிகள் கெடுத்தற்கு மிகவுமஞ்சுவர். விரோதிகள் அவனைக் கெடுத்தல் செய்யாதிருப்பதற்கேது, அவனிடத்துப்பொருள்மிகுதியாக விருப்பதாகலின், ஒவ்வொருவர்க்கும் பொருளை மிகுதியாகச் சேர்த்துக்கொள்ளுதல் அவசியமான காரியமாம். ஆனால் அதனை நல்வழியிற்றேடி வீணே செலவு செய்யாது பாதுகாத்து வருபவர் தாம் அறத்தைச்செய்து மறத்தையொழித்து,இன்பத்தை யனுபவித்து வருதற்குரியவராவர். தாந்தேடிய பொருளையேயன்றித் தம் முன்னோர் தேடிவைத்த பொருளையும் பாதுகாத்து வந்தாற்றான் தாம் சுகமாக வாழ்வதமையும். "தாந் தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை" என்னும் பழமொழிக் கிலக்கியமாய் நின்று தம் முன்னோர் தேடிவைத்த

பொருளை விரும்பியவாறு செலவுசெய்துவருபவர் மானமழிந்து மதிகெட்டுத் திருடனைப்போன்று தாம் வசிக்குமூரையும்விட்டன்றே ஓடுதல்வேண்டும்? இது "ஆன முதலி லதிகஞ் செலவானால், மான மழிந்து மதிகெட்டுப்-போன திசை, எல்லார்க்குங் கள்ளனு மேழ்பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்று நல்வழிகூறுவதால் நன்குவிளங்கும்.

"அப்பன் தேடிவைத்த அரும்பொருளனைத்தையு மழிக்க வந்த சிகாமணி" என்பதற் கிலக்கியமாகாது, தம்முன்னோர் தேடி வைத்த பொருளை மிகுகவனமாகப் பாதுகாத்து, நாம் கனவான் வீட்டுப்பிள்ளையன்றோ; நாமேன் கஷ்டப்பட்டுப் பொருள்தேட வேண்டுமென்று கருதிச் சோம்பியிராது, பொருளை மேலும் மேலும் ஊக்கத்தோடு நல்வழியிற் சென்று தேடுதல் இல்லறத்தார்க் கின்றியமையாதகடமையாம். பொருளில்லாதவரது இல்லறம் எவ்வாறினிமையுடையதாக நடைபெறுவதாம்? முன்னோர் தேடிய பொருளிருந்தால் அதனையும் தாந்தேடிய பொருளையும் செவ்வையாகப் பாதுகாத்து வருபவர்தாம் இல்லறவாழ்க்கையை யினிமையாக நடத்தி, எவரும் புகழவாழ்வது கூடும். காட்டில் வசிக்கும்புலிசிங்கமுதலியவற்றிற்குக் காவல் அவைவசிக்கும்காடடர்த்தியாக விருத்தலும், அஃதழிக்கப்படா திருப்பதற்குக் காவல் அக்காட்டின்கண் புலிசிங்கமுதலியன வசித்தலுமா யிருத்தல் போன்று, பொருளுடையவனுக்குக் காவல் பொருளும் பொருளுக்குக்காவல் பொருளுடையவனுமாம். எவன் பொருளைப்பாதுகாத்து வருகின்றானோ அவனைப்பொருள் பாதுகாத்து வருவதாக விருத்தலின், தம்மிடத்துள்ள பொருளைப் பாதுகாத்து வருபவரை அப்பொருளே பாதுகாத்து வருவதாம். பொருளில்லாதவர் யாது பயனையடைதற்குரியவராவர்? மக்களுள் பதடியென்பவர் அவரே யன்றோ? பொருளில்லாதாரை யாவருமிகழ்தல் மிகுபிரசித்தமா மன்றோ?

"இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை, யெல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்திருப்பதனைச் சிறிது நோக்குவார்க்குப் பொருளில்லாதவர் இகழ்ச்சிக்கே யுரியவராவரென்ப தினிதுவிளங்கு மன்றோ? "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு மெய்தும்" என்று நாலடியார் கூறுவதை நன்குண

ர்ந்து நோக்குவோமாயின், அறம்பொருளின்ப மென்னும் திரிவர்க்கத்துள் பொருளுடையானுக்கு அறத்தைச் செய்தலும் இன்பத்தை யனுபவித்தலும் சித்தியாமென்பது செவ்விதாக விளங்கும். அறத்தைச் செய்தலும் இன்பத்தை யனுபவித்தலும் பொருளில்லாதார்க்கு ஒருவாற்றானு மில்லையாமென்பதை விளக்கத்தான் அறம்பொருளின்ப மென்னுந் திரிவர்க்கத்துள் பொருள் ஆய்தவெழுத்துப்போல அறத்திற்கும் இன்பத்திற்கும் நடுவேவைக்கப்பட் டிருக்கின்றது. ‡ அஃது, இஃது என்னும் பிரயோகங்களுள் மூன்று புள்ளிவடிவினதாகிய ஆய்தவெழுத்து நடுவே யிருப்பதுபோலப் பொருள், அறம்இன்பமென்பவற்றிடையே யிருப்பதால் அதனது சிறப்புநன்குபுலனும். மக்கள்மேன்மை யடைவதற்குக் காரணம் பொருள், தவம், கல்வி, முயற்சி முதலியனவாம். இவற்றுள், இல்லறத்தார் மேன்மை யடைவதற்குச் சிறப்புக்காரணம் பொருளும், துறவறத்தார் மேன்மையடைவதற்குச் சிறப்புக்காரணம் தவமுமாம்; மற்றையன இருவரும் மேன்மையடைதற்குப் பொதுக்காரணமாம். இல்லறத்தார் பொருளில்லாவிடத்து எவ்வாற்றானும் மேன்மையடையா திருத்தலின், பொருளை மேன்மேலும் விருத்திசெய்து வாழ்பவர்தாம் ஈதல் இசைபட வாழ்தலுடையவராவர்.

ஆலமரம் கறையானால் தின்னப்பட்டுள்ளபோது, அதனை அதனதுவிழுது கீழேவிழாவாறு தாங்குவதுபோலத் தம்முடைய குடும்பம் வறுமையால் தளர்வுற்றபோது அதனைப் பொருளைத் தேடிப் பாதுகாப்பவனன்றோ பிள்ளையாவன்? பொருளை நல்வழியிற் சென்று தேடி, அதனைப் பாதுகாத்து, அதனால் தன்குடும்பத்தையும் தன்னையுங் காப்பாற்றிக்கொள்ளாதவன் உயிரோடிருப்பதினு மிறப்பதே நலமன்றோ?

பொருளென்பன:—மனைவி, மைந்தர், தாசி (வேலைக்காரி), தாசன் (வேலைக்காரன்), பசு, பூமி, திரவியம், வீடு, தானிய முதலியனவாம். "இயற்றலுமீட்டலும்" என்னுங் குறளின் விசேடவுரையில் பரிமேலழகர் "பொருள்களாவன:—மணி, பொன், நெல் முதலாயின" என்றருளியிருப்பது மிங்குக் கவனித்தற்பாலதாம். மனைவி, முதலிய பொருள்களுள் திரவியமே சிறப்புவகையா

‡ குறியதன் முன்ன ராய்தப் புள்ளி, யுயிரொடு புணர்ந்த வல் லாறன் மிசைத்தே என்பது தொல்காப்பியம்.

கப் பொருளென்று சொல்லப்படுகின்றது. தம்முன்னோர் தேடிவைத்த திரவியத்தைச் செப்பமாகக்காப்பதுடன் தாம் தருமவழியிற் சென்று தேடியபொருளிற் றருமத்திற்காகக் காற்பங்கு செலவுசெய்து, அரைப்பங்கு உண்டிமுதலியவற்றிற் காக உபயோகமாக்கி, மற்றைக் காற்பங்கைக் கவனமாய்ப் பாதுகாத்து வருபவர்க்கு வறுமைப்பிணியால் வருந்துவது வருவதேயில்லையாம்.

தருமவழியிற்சென்று தேடியபொருளைக் கொண்டு அறத்தைச்செய்து, இல்லறவாழ்க்கைக் குரிய இன்பத்தை யனுபவித்து வருபவர் மறுமையில் தேவராய்ப் பிறந்து சுவர்க்கவின்பத்தை யனுபவிப்பரென்பது சாஸ்திரங்களின் துணிபாம்; இவ்வாறிருத்தலை நன்குணர்ந்து பொருளை உழவு, வியாபாரம், உத்தியோகமென்னுமிவற்றுள்யாதாவதொன்றால் விருத்தியாக்கி, அதனைத் தீயவழியிற் செலவுசெய்யாது, நல்வழியில் அதனளவிற்கேற்ப இடம்பமின்றிச் செலவுசெய்து, பாதுகாத்துவருபவரை அவரது பொருள் தவறாது காப்பதாம். பொருளை நாமலட்சியஞ்செய்வோமாயின், அதுநம்மையலட்சியஞ்செய்து நம்மினின்றும்நீங்கிப்போம். பொருள் நம்மினின்றும் நீங்கிப்போயின், நாம் வறுமைக் கடிமையாகி வருந்துவோமென்பதற்கு ஆட்சேபமுமுண்டோ?

பொருளில்லாதவர் தாம் மேற்கொண்ட காரியத்தை யெளிதின் முடித்தற் குரியவராகார்; பொருளுடையாரே மேற்கொண்ட காரியத்தை எளிதின் முடித்தற்குரியவராவர்; பொருளுடையான் செய்யும் காரியம் மலைமீதிருந்துயானைப்போரைக்காண்பதுபோலவாம்; பொருளுடையார்க்கே இம்மையின்பத்தை யனுபவிப்பது வாய்க்குமென்றுணர்ந்து பொருளை விருத்திசெய்து வாழ்பவர் எப்பயனை யடையாமற் போவர்? மோட்சமும் பொருளை விடுதலாலன்றோ சித்திக்கின்றது? பொருளில்லாதவன் எதனை விட்டு மோட்சமடைவன்? நல்வழியிற்சென்று பொருளைத்தேடி அதனை விருத்தியாக்கி வருபவன்றான் இம்மைப்பயன், மறுமைப்பயன், மோட்சமென்னு மூன்றையு மடைவதற் குரியவனாவன். பொருள்கிடைப்பது முற்பிறப்பிற்செய்த புண்ணியவசத்தினாலாதலின், அதனை மறந்தும் பாவவழியிற் செலவிடாது பாதுகாத்துவருதல் வேண்டும். "பாக்கியமில்லாதான் பதராவான்" என்னும் பழமொழிக்கிலக்கியமாகாது, பொருளைப்புண்ணியவழியிற் சென்று தேடிப்பாதுகாத்து வருப

வர்தாம் பொருளைப் போற்றி வாழ்பவராவர். அவர்தாம் ஈசனது கருணைக்கு எளிதாகப் பாத்திரராவர்.

''புண்ணிய வசத்திறற் செல்வமது வரவேண்டும்
பொருளைரட் சிக்கவேண்டும்
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்,
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரண
முடலிற் றரிக்கவேண்டும்
முற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்,
மண்ணில்வெகு தர்மங்கள் செயவேண்டு முயர்மோட்ச
வழிதேட வேண்டுமன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்.''

என்று பெரியார் கூறியிருப்பது இங்கு நன்கு கவனிக்கற்குரியதாம்.

சநாதன பாநவ தர்மம்.

(முன் தொடர்ச்சி)

ஜீவனம் நடப்பதன் பொருட்டு மாத்திரம் சிறந்த கார்யங்களால் தன்சரீரத்திற்குச் சிரமமில்லாது பொருளைச் சம்பாதித்தல் வேண்டும். 2

வயது தொழில் பொருள் சாஸ்திர சிரவணம் வம்சம் இவைகளுக்குத் தக்கபடி வேஷம் வாக்கு புத்தி இவைகளில் ஒன்றாகயிருந்து அனுஷ்டித்தல்வேண்டும். 3

புத்திக்குப் பெருக்கத்தைச் செய்வனவற்றையும், கிருதார்த்தங்களும் ஹிதங்களுமாகிய சாஸ்திரங்களையும், வேதங்களின் அர்த்தங்களை விளக்கும் சாஸ்திரங்களையும் கவனித்தல்வேண்டும்.

புருஷன் சாஸ்திரங்களைப் பார்ப்பதற்குத் தக்கபடி அறிவை அடைகிறான்; அறிவும் இவனுக்கு விளங்குகிறது. 5

ஜலத்தில் மூத்திரத்தையாவது மலத்தையாவது எச்சிலையாவது விடுதல் கூடாது; அசுத்தவஸ்துக்கள் சேர்ந்த மற்றதையாவது இரத்தத்தையாவது விஷவஸ்துக்களையாவது விடுதல் கூடாது. 6

மண் ஓட்டாஞ்சில்லு என்னுமிவற்றைப் பிசைதல்கூடாது; நகங்களால் திருணங்களைச் சேதித்தல்கூடாது; பின்னர்க் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதும் ப்ரயோஜனமற்றதுமாகிய கார்யத்தைச் செய்தல் கூடாது. 7

அங்கம்குறைந்தவர்கள், அதிகமான அங்கமுடையவர்கள், வித்தையில்லாதவர்கள், வயதுமிகுந்தவர்கள், ரூபமில்லாதவர்கள், பொருளில்லாதவர்கள், தாழ்ந்தஜாதியுடையார் இவர்களை அவமதித்தல்கூடாது. 8

பெரியோர்களை நமஸ்கரித்தல் வேண்டும்; அவர்களுக்குத்தன்னுடைய ஆஸனத்தைக் கொடுத்தல்வேண்டும்; கைகூப்பிப்பக்கத்திலிருத்தல்வேண்டும்; அவர்சென்றால்பின் செல்லல்வேண்டும். வேதங்களிலும் ஸ்மிருதிகளிலுங்கூறப்பட்டுள்ளதும்தான் செய்யவேண்டிய தர்மங்களைச் சார்ந்ததும், தர்மத்திற்கு மூலமுமான ஸதாசாரத்தைச் சோம்பலின்றி அனுஷ்டித்தல் வேண்டும். 9

ஆசாரத்தால் ஆயுளை அடைகிறான்; ஆசாரத்தா லிஷ்டப்படி பிரஜைகளை யடைகிறான்; ஆசாரத்தால் அழிவில்லாப்பொருளை யடைகிறான். ஆசாரமானது துர்லக்ஷணத்தைப் போக்குகின்றது.

துராசாரமுள்ள புருஷன், உலகில் நிந்திக்கப்படுகிறவனும் எப்பொழுதும் துக்கத்தையடைந்தவனும் வியாதியுடையவனும் அற்பமான ஆயுளுடையவனும் ஆகிறான். 11

லக்ஷணங்களெல்லா மில்லாதவனாயினும் எந்த மானிடன் ஸதாசாரமுள்ளவனோ சிரத்தையுள்ளவனோ அஸூயையில்லாதவனோ அவன் வெகுவருடங்கள்வரையில் ஜீவித்திருக்கிறான். 12

எந்தக் கார்யத்தைச் செய்தால் இவன் மனதுக்குச் சந்தோஷமுண்டாகுமோ அதை முயற்சியுடன் செய்தல்வேண்டும்; விபரீதமானதை விட்டுவிடுதல்வேண்டும். 13

(பரலோக முதலியவை) இல்லையென்பது, வேதத்தை நிந்தித்தல், தேவதா நிந்தை, த்வேஷம், டம்பம், மானம், கோபம், கடுமை என்னுமிவற்றையொழித்தல்வேண்டும். 14

புத்ரன், ஸிஷ்யன் இவர்களைத்தவிர மற்றவர்களைத் தான் கோபங்கொண்டவனாயினும் ஸிக்ஷித்தல்கூடாது; புத்ரன் ஸிஷ்யன் இவ்விருவரையுஞ் சீர்திருத்துவதற்கு அடித்தல்வேண்டும். 15

மூத்தோனாகிய ப்ராதா இளைய ப்ராதாக்களைப் புத்ரர்களைப் போலக்காத்தல்வேண்டும் இளையவர்கள் மூத்தோனாகியப்ராதாவிடம் புத்திரர்கள்போலிருந்து மர்ம்மாக ஊழியஞ்செய்தல்வேண்டும்.

எவன் அதர்மமுள்ளவனோ எவனுடைய பொருள் பொய்யானதோ எவன்எப்போதும் ஹிம்ஸையில் பற்றுதலுடையவனோ அவன் இங்கு ஸுகமடையான். 17

தர்மத்தால் வருத்தப்படுகிறவனாயினும், அதர்மம் செய்யும் பாவிகள் நாசமடைவதைப் பார்த்து அதர்மத்தில் புத்தியைச் செலுத்துதல் கூடாது. 18

உலகத்தில் அதர்மத்தைச் செய்தால் அது பசுவைப்போல் உடனே பலனைக்கொடுப்பதில்லை. அதர்மமானது சுழன்று செய்பவனுடைய மூலங்களை மெதுவாகச் சேதிக்கிறது. 19

ஸத்யம் தர்மம் பெரியோர்களின்சரித்திரம் பரிசுத்தமென்னுமிவற்றுள் எப்போதும் திருப்தியடைதல் வேண்டும். 20

வாக்கு, கை, வயிறு என்னுமிவற்றை யடக்கிச் ஸிஷ்யர்களையும் சீர்திருத்தல் வேண்டும். 21

தர்மமில்லாத அர்த்தத்தையும் காமத்தையும்தள்ளல்வேண்டும். பின்னர்க்கஷ்டத்தைக் கொடுப்பதும் ஜனங்களால் நிந்திக்கத்தக்கதுமாகிய தர்மத்தையும் தியாகஞ்செய்தல் வேண்டும். 22

கை-கால் கண் இவைகளில் சபலத்தன்மையில்லாமலும், கபடனாக ஆகாமலும், வாக்கில் சபலத் தன்மையில்லாமலும், பிறர்க்குத்ரோகஞ்செய்வதில் புத்தியில்லாமலுமிருத்தல்வேண்டும். 23

தந்தை சென்றவழியினும், பிதாமகன் சென்றவழியினும், ஸாதுக்களின் மார்க்கத்தை யனுஸரித்தல்வேண்டும்; அவ்விதம் நடந்தால் துக்கமடையான். 24

பிராணி ஒருவனாக உண்டாகிறான்; ஒருவனாகவே நாசமடைகிறான்; ஒருவனாகவே புண்யத்தை அநுபவிக்கிறான்; ஒருவனாகவே பாபத்தையும் அனுபவிக்கிறான். ஆகையால் ஸஹாயத்திற்காகத் தர்மத்தை மெதுவாகத்தேடல்வேண்டும். தர்மத்தை ஸஹாயமாகக் கொண்டு தாண்டக்கூடாத அஞ்ஞானத்தைத் தாண்டுகின்றான். 25

தர்மத்தை முக்யமாகக்கொண்டவனும், தபஸ்ஸால் பாபங்களைப் போக்குகிறவனும், ப்ரகாசிப்பவனும், தன்னையே (தர்மத்தைதே) சரீரமாக அடைந்தவனுமாகிய புருஷனைத் தர்மமானது விரைவில் பரலோகத்தில் சேர்க்கிறது. 26

தன் குலத்திற்கு உயர்வை விரும்பியவன் உத்தமர்களினும் உத்தமர்களாகி அவர்களுடன் எப்போதும் சேருதல்வேண்டும்; அதமர்களினும் அதமர்களைத் தள்ளுதல் வேண்டும். 27

முயற்சித்ததை முடிப்பவனும், மிருதுவும், உள் இந்திரிய நிக்ரஹமுள்ளவனும், க்ரூரனான ஆசாரமுடையவர்களுடன் ஸஹவாஸம் செய்யாதவனும், க்ரூரஸ்வபாவமில்லாதவனுமாகிய கட்டுப்பாடுள்ள விரதநியமங்களுடன் இந்திரிய நிக்ரஹத்தாலும் தானம் செய்வதாலும் ஸ்வர்க்கத்தை ஜயித்தல்வேண்டும். 28

கண்களால் கவனித்துப் பரிசுத்தமான விடத்தில் பாதங்களை வைத்தல்வேண்டும்; வஸ்திரத்தால் பரிசுத்தமான ஜலத்தைப் பானஞ் செய்தல் வேண்டும். 29

நடேசசாஸ்திரிகள்.

How to make life happy.

"பஹாவம் தஹவதி". "மனம்போல வாழ்வு" என்னும் வசனம் நம் செவியில் எத்தனை முறையோ விழுந்திருந்தாலும் நம்மில் பலர் அதன் அர்த்தத்தை நன்குணர்ந்து அதன்படி ஒழுக முயல்வதில்லை.

உலகத்தில் ஸர்வஜனங்களும் ஸர்வப்ராணிகளும் ஸுகத்தை விரும்பித் துக்கத்தை வெறுக்கிறார்கள் என்பது ஒவ்வொருவருக்கும் ஸ்வானுபவமே. ஆனால், அந்த ஸுகத்தையடையும் மார்க்கத்தைத் தான் பலரும் சிந்திப்பதில்லை. சிலர்க்கு வழி இன்னதென்று தெரிந்திருந்தும், அதை அனுஷ்டிக்காமலே ஸுகத்தைத் தந்திரமாய் அடைந்துவிடலாம் என்று கருதுகிறார்கள். தங்களுடைய வயல்விளைய வேண்டுமானால், அதை உழுது நீர்பாய்ச்சிப் பயிரை நட்டுக் களைபெடுத்து அதுமுதிரும்வரையில் காத்துப்பிறகு அறுப்பறுத்தால்தான் வேளாண்மை வீடு வந்து சேரும் என்று அனுபவசித்தமாய்த் தெரிந்த மனிதர்களும், ஆத்மலாபகாரியத்தில்

மாத்திரம் தமது பிரயத்தனமின்றி ஸுகம் எப்படிக்கிடைக்கும் என்று ஸந்தேகிக்கிப்பதில்லை.

நாம் எந்தப் பயிரை விரும்புகிறோமோ அதன்விதையைத் தானே நிலத்தில் விதைக்கிறோம். அதேமாதிரி ஸுகத்தைத் தேடுகிறவன் தன்மனதில் எப்பொழுதும் ஸுகமான (நல்ல) எண்ணங்களையே விதைக்கவேண்டும். பேசும்போதெல்லாம் உலகத்திலுள்ள துக்கத்தைக் குறைத்து ஸுகத்தை அதிகப்படுத்தக் கூடியவார்த்தைகளையே பேசவேண்டும். உலகத்தில் தனக்கு நேரிடும் எந்த ஸம்பவத்திலும் ஒரு அணுவளவாவது ஸுகமிருந்தால் அதை மலையளவாகப் பெருக்கிப்பார்த்து மற்றதைக் கவனியாதொழிய வேண்டும்.

எந்தக்காலத்தில் எந்த அவஸ்தையில் பிறர் நம்மிடத்தில் எப்படி நடந்து கொண்டால் நமக்கு ஸுகம் தரும் என்று கருதுகிறோமோ அத்தகைய காலாவஸ்தைகளில் உலகத்தினிடத்தில் நாம் அப்படியே நடந்துகொள்ளல் வேண்டும். அப்படிச் செய்வதனால் நமது சத்துருக்கள் பரமமித்திரர்களாவார்கள். அன்பானது நமது மனத்திலிருந்து சுரந்து உலகமெங்கும் நாலாப்பக்கத்திலும் பரவி வியாபிக்கும்போது நமக்குண்டாகும் ஸுகத்தை எப்படி வர்ணிப்பதாம்?

மேற்சொன்ன நிலைமையைபடைவதற்கு நமது மனமானது பரிசுத்தமாயும், அன்பு நிறைந்ததாயும், ஸதா உத்ஸாகத்தோடு கூடியதாயு மிருக்கவேண்டும். அந்த நிலைமையில் லோகோபகாரத்தில் நமக்கு எப்பொழுதும் ஒரு சுறுசுறுப்பு உண்டாகுமேயொழிய, சோம்பல் உண்டாகவே உண்டாகாது ; மனத்தில் சஞ்சலம் ஸந்தேகம் உதிக்கவே உதிக்கா.

நமது மனோநிலைமையும் உலகத்தின் நிலைமையும் செவ்வனே நமக்கு விளங்கும். பிரபஞ்சமாகிய கடிகாரத்தின் சக்கரங்களாகிய நாம் ஒவ்வொருவரும் மற்றச் சக்கரங்களாகிய இதரமனிதர்களோடு ஒத்து உலகத்தின் பொது நன்மையைக் கருதி உழைப்போம்.

மழை பெய்தாலென்ன? வெயிலெரித்தாலென்ன? எது எப்படியானாலென்ன? நமது மனத்தில் குடிகொண்டிருக்கும் ஆநந்தம் அசையாமல் துலங்கிக்கொண்டே யிருக்கும்.

K. Rangaswami Ayyangar.

குசேலர் சரித்திரம்.

சற்சனர் புகழும் சந்திரவம்ஸத்தில் தோன்றித் தரணியோர் மகிழத் தண்குடை நடாத்திச் செங்கோற் கைக்கொண்டு சீரிதாக உலகினை யாண்டுவந்த பரீட்சித்து மகாராஜன், தக்ஷன் என்னும் சர்ப்பச்சிரேஷ்டனால் தனக்கிடையூறு நேருமென்று தாபதசிரேஷ்டர் வாயிலாக வுணர்ந்து, சமுத்திரத்திலே ஸ்தம்பம் ஒன்றுநாட்டி அதன்மீது மரவீடொன்றமைத்து அதிற்றங்கித் தன்னாளை நன்னாளாகச் சுகப்பிரமரிஷிவாயிலாகப் பாகவதத்தை வரலாற்றுமுறையாகக் கேட்டுவந்தான். அவன் அவ்வாறு கேட்டுவருங் காலத்தில் சுகப்பிரமரிஷி கீழ்க் கூறுங்கதையை நீ கருத்தூன்றிக் கேட்பாயாயின் பேறிழவு, சுகதுக்கம், வெற்றி தோல்வி முதலிய இருமைகளின்றி உபசாந்த முடையவனாயிருப்பா யென்று வற்புறுத்திக் குசேலர் சரித்திரத்தைக் கூறுவாராயினர்.

மலைகள் குடிகொண்டிருப்பனபோல அளவிறந்த வளவிய மாளிகைகள் நிரம்பி, நாடாவளத்தினை நன்குடையதாகி, கண்டோர்க்கும் கேட்டோர்க்கும் பேருவகையையுண்டாக்கி, மண்மகளுக்கு வதனமென விளங்கிய உத்காமதுரையென்னும் ஒப்பற்ற நகருக்கருகே அவந்தி யென்னுமொரு நகரமுண்டு. அது நகர்க்குரிய சிறப்பெல்லாம் அமைந்து விளங்கினமையின், அதனைப் பார்க்க விரும்பாதவரும் அதுபற்றிக் கேட்க விரும்பாதவரும் ஒருவருமிலர். அது தேவர்களும் விரும்பி நோக்குஞ் சிறப்பினையுடையது. அவ்வவந்தி நகரத்துக்கருகே காட்டுக்குரிய இலக்கணங்களெல்லாமமைந்த ஒரு பெருங்காடுண்டு. அக்காட்டிடையே குரவருமருளுங் குன்றமொன்றுண்டு. அம்மலையின் முடியிலே பார்ப்பனச்சேரி யொன்றுண்டு. அச்சேரியிலுள்ளார் யாவரும் சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாச முதலியவற்றை நன்குணர்ந்து நல்லொழுக்க முடையவரா யிருந்தனர். அவர்களுள்ளே பாற்கடலிலே பனிமதி உதயமானாற் போலக் குசேலரென்னும் ஒரு பெறலருந் தவத்தோன்றல் தோன்றி, ஐவாயரவணைமீது அறிதுயில் கொள்ளும் அச்சுதனடிகளை அன்பாகத் துதித்து, இந்திரியச் சேட்டைகளை வென்று, இங்கிதமானவற்றைச் செய்து, யாவரும் இனியோன் இனியோன் என்று கூற இனிமையாக வாழ்ந்து வந்தனர். தம்முயிர்போல மன்னுயிர் புரத்தலேயே தம்முடைய

விரதமாகக் கொண்டு, மறைநூல் கூறுவது வாய்மையேயென்று துணிந்து, தீமைபுரிவதைச் சொப்பனத்திலும் நினையாது, அடக்கம், பொறுமை, கருணை, நண்பு, அழுக்காறிலாமை முதலியவற்றை நட்பாகக் கொண்டு, காமம் வெகுளி, கடும்பற்றுள்ளம் (லோபம்), மானம், உவகை, மதம் என்னும் அறுபகைகளை அடியோடழித்து, கயவர் தொடர்ச்சியைக் கனவினும் நண்ணாது இருப்பவர். இவர் சாந்தீபமுனிவரது சரண கமலங்களைத் தஞ்சமாக அடைந்து, பூமிபாரந்தீர்க்க 'ஆதிபஞ்சோதியை அங்குவைத்து இங்குப்பிறந்த' கண்ணனோடு படியிலா மறைகளைப் பண்புறக் கற்று, கஞ்சனென்னும் வஞ்சனைக் கொன்ற காயாம்பூ மேனியையுடைய அக்கண்ணனோடு கனவினும் நீங்காத நட்பினை யுடையவராயிருந்தார். இவர் எப்போதும் வைராக்கிய முடையவராய்ச் சாந்திராயணம், கிரிச்சிர முதலிய செய்தற்கரிய விரதங்களை அடிக்கடி செய்துவருவார்; அவ்வாறு செய்து வருவது காரணமாக மிக இளைத்த மேனியுடையவராய்க் காணப்படுவார். இவர் ஒவ்வொருநாளும் பிராதக்காலத்திலே நித்திரையினின்றும் நீங்கி, நூல்விதித்தவாறு மலஜல விசர்ஜ்ஜனம் செய்து, கரகத்திலுள்ள நீரினால் கால்கை முதலியவற்றைச் சுத்தி செய்து பற்றுலக்கிப் பின்னர் ஸ்நானஞ்செய்து, சந்தியாவந்தனம் ஜபம், வந்தனை முதலியவற்றைத் தவறாது செய்துவருவார். ஐம்பொறியடக்கி, ஐம்புலன் வென்று, ஒன்றுபட்ட உள்ளத்தினையுடைய இவரை அச்சேரியிலுள்ளார் யாவரும் தெய்வம் போலப் பாராட்டிப் புகழ்வர். இவர் சிலகாலம் நாட்டிலும் சிலகாலம் காட்டிலும் வசித்து ஐம்பொறியடக்கி, ஐம்புலன் வென்று, அறுபகை கொன்று, அருந்தவம்புரிந்து வந்தமையின், இவர்க்குக் காட்டில் வசிப்பதும் நாட்டில்வசிப்பதும் ஒரு தன்மையனவாகவே விளங்கின. இவர் மிகப் பலவாகக் கிழிந்த துண்டுகளை ஒருங்குசேர்த்துத் தைத்துத் தமக் காடையாகத் தரித்திருப்பார். அது காரணமாக இவர்க்குச் சுதர்மாவென்னும் இயற்பெயர் நீங்கிக் * குசேலரென்னுங் காரணப்பெயர் வழங்குவதாயிற்று.

காமம் வெகுளி மயக்கமென்னும் முக்குற்றங்களையுங் கடந்த மனத்தினராய், வேதத்தின் எல்லையைக்கண்டு, விருப்பு வெறுப்பு மிகச் சிறிதாகவேனும் எழாது விளங்கிய குசேலமுனிவர் பாற்கடல்மீது கார்க்கடல் படுத்திருப்பதுபோல அரவணைமீது அறி

* குசேலம்-கிழிந்த வஸ்திரம், அதனையுடையவர் குசேலர்.

துயில் கொள்ளும் அச்சுதனையல் லச்சுதற்பரனது அரவிந்த அடிகளை நாம் பிறவிக்கடலைக் கடப்பதற்குப் பெருந்துணையா மென்று துணிந்து,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையுன் மலர்க்கையாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி"

என்று பெரியார் கூறியவாறு இடைவிடாது தியானஞ்செய்து வருவார். லோகவாசனை தேகவாசனை சாஸ்திரவாசனை யென்னு மூன்று மகன்றமுத்தர்போல விளங்கிய இவர் தாம்வசிக்கும் பார்ப்பனச்சேரியிலுள்ளாரது பிரார்த்தனையால், தாம் செய்யும் தவத்துக்குத்தக்க துணையாயிருக்கு மென்று கருதி நற்குண நற்செய்கைகளுக் குறைவிடமாயுள்ள சுசீலை யென்னும் சுந்தரவல்லியைச் செப்பமாக விவாகஞ் செய்து கொண்டனர். இந்நங்கையார்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் அருளிய திருக்குறளுக்கு இலக்கியமாயிருப்பவர். நற்குடியிற் பிறந்த இந்நாரீமணி அன்பும் சாந்தமுங்கொண் டொழுகுதலே தமக்குச்சிறந்த ஆபரணமென்று கருதுவார். நற்குண நற்செய்கைகளையுடைய இம்மாசிலா மடக்கொடி வந்த விருந்தினரை மிகமகிழ்வோ டுபசரித்து வருவிருந்தினரை மிக ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்; "கொண்டான்குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்னும் இலக்கணத்திற்கு இவ்வம்மையாரே இலக்கியமாவரென்று நல்லோர் கருதுமாறு தமது கணவனது உள்ளக்குறிப்பினைக் குறிப்பாக அறிந்து அதற் கேற்றவாறு ஒழுகி வருவார்; காமத்தைக் காய்ந்து கோபத்தைக் கோபித்திருப்பார்; பிறர்க்குத் தீங்குபயக்கும் வார்த்தையை மறந்தும் பேசார்; "போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்றுதுணிந்து தாம்பெற்ற பொருளைக் கொண்டு பெருமகிழ்வடைந்திருப்பார். கற்பின் மிக்க இவ்வுத்தமமாது பெற்ற பொருள்சிறிது, பெறுத பொருள் பெரிது என்றெண்ணியது எஞ்ஞான்றும் இன்றும்.

சூடாலை.

மூன்றாவது அங்கம்.

முதற்காட்சி.

பாத்திரம்:—சூடாலை, பதுமாவதி, சிதரன், காசிகாநந்த சுவாமிகள், சித்துவசன்.

இடம்:—மாளவதேசம் அந்தப்புரம்.

சூடாலை:—(கோவிலூர் சுப்பய்ய சுவாமிகள் அநுக்கிரகஞ்செய்த யோகவிஷயங்களை யேகாந்தமான விடத்திருந்து சிந்தித்து, பலநாள் பதுமாசனத்தி லிருந்து பிராணாயாமஞ் செய்து யோகசித்தி பெற்றுத் தனக்குள்ளே) பிராணாயாமத்தைப் பூரணமாகச் செய்து முடிப்பவர்க்குப் பெறுதற் கரியது யாதிருக்கின்றது? இனியஞ்சத் தக்கது யாதொன்றுமின்று; நமது மகாராஜாவை நாம் வசப்படுத்துவது இனிமிக வெளிதாம். அணிமாதி அஷ்டஐசுவவரியமும் கைவரப் பெற்ற நமக்கினி என்ன குறையுளது? அணிமாதிஅஷ்டஐசுவரியங்களுள் ஒன்றேனும் பிழை யுறுதுள்ள நாம் அடிக்கடி வீணாக மகாராஜாவைப்பற்றி யேன் கவலைப்படவேண்டும்? பக்கத்தறையி லிருந்து நாம் கூறியவாறு யோகாப்பியாசஞ் செய்யும் பதுமாவதி எவ்வாறிருக்கின்றாளென்று விசாரிப்போ மென்று சிந்தித்து வெளியே வந்து, பதுமாவதி யிருக்கும் அறையினருகே சென்று, பதுமாவதி! என்ன செய்கின்றாய்; வெளியே வரக்கூடுமாயின், எழுந்துவா?

பதுமாவதி:—(சூடாலை யழைத்த இரண்டொரு கணத்திற்கு முன்னே போகபாவனையி னின்றும் நீங்கி, யோகாப்பியாசத்தின் மகத்துவத்தைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருந்த பதுமாவதி சூடாலையின் குரலைக் கேட்டு விரைந்தெழுந்து வெளியே வந்து சூடாலையை மிகு அன்பாக நமஸ்காரஞ்செய்து) சூரியனை யொத்த தேஜஸுடைய சுந்தரி! அடியாள் செய்யவேண்டியதைக் கட்டளையிட் டருளல் வேண்டும்.

சூடா:—கட்டளையொன்றுமில்லை. இத்தனை நாளாக நீ செய்துவந்த யோகாப்பியாசத்தைப் பற்றி யின்றுன்னை வினவ ஆவல் கொண்டிருக்கின்றேன். எனக்கித்தனைநாள் சென்றது யான்

செய்துவந்த யோகாப்பியாசஞ் சித்தியாக. அதனால் இது முன்னை யதுபற்றி வினவா திருந்தேன்.

பது:—மதிநிகர்வதன மங்கையர்க்கரசி! யானிதுகாறுஞ் செய்து வந்தயோகாப்பியாசத்தால், மனம் யான்விரும்பியவாறு வசப் பட்டுவருவதொன்றே சித்தியாயிற்று; அணிமாதி அஷ்ட ஐசு வரியங்களுள் ஒன்றும் சித்தியாகவில்லை; அதனால் இன்னு மெனக்கு யோகபாவனை பூரணமாகச் சித்தியாகவில்லையென் று தீர்மானித்திருக்கின்றேன். அந்தச் சித்திகள் எனக்குச் சித்தியாக அம்மையார் அனுக்கிரகஞ்செய்தருளல் வேண்டும்.

சூடா:—"சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சென்மமற, முத்தி நெறி கேட்டல் முறைகாண் பராபரமே" என்று கரபாத்ர சிவப்பிரகாசசுவாமிகள் அடிக்கடி கூறுவது உனது ஞாபகத்தி லிருக்குமென்று நினைக்கின்றேன். மனம் வசப்பட்டுவருவ தொன்றுதான் நமக்கத்தியாவசியகமாக வேண்டற்பாலதாம். அதுதான் நாம்பிறவிப்பிணியினின்றும் நீங்குவதற்குத் தக்க மருந்தாம். அணிமாதி அஷ்ட ஐசுவரியம் பெரும்பான்மை யும் உலகத்தாரை மருட்டற் பொருட்டாம் அவைசித்தியாகா மைபற்றிக் கவலையடைபவேண்டாம். அணிமாதி அஷ்ட ஐசு வரியங்கள் உனக்கும் சித்தியாம்; சித்தியாவிடினும் யாமெண்ணியுள்ள காரியஞ் சித்தியாம். கோவிலூர் ஸ்ரீ சுப்பய்யசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியவாறு யோக பாவனையை விடாது செய்வாயாயின், உனக்கவை யத்தியா வசியகமாகச் சித்தியாம். யோகத்தின் பயன் தத்துவ ஞானமா மென்றுணராது, அணிமாதி சித்தியா மென் றுணர்ந்து அவலமாய்ப் போனவர் பலர். "முனிவர் சித் திகள் விநோதமாத் தரந்தரு முத்தியைத் தாராவே" என்று பெரியார்கூறி யிருப்பதை அடிக்கடி ஞாபகத்திற்குக் கொ ண்டுவந்தாற்றான் நாம் நன்மையை யடைவது கூடும். கேவலம் சித்தியை விரும்புவது பெரும்பேதைமையாம். யான் சித்தியை விரும்புவதற்குக் காரணம் உனக்குத் தெரி யாததன்றே!

"எண்ணு யிரத்தாண்டு யோக மிருப்பினும்
கண்ணா ரமுதனைக் கண்டறி வாரில்லை
யுண்ணாடி ஞானத் தொளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே."

என்று பெரியாரருளி யிருத்தலைச் செவ்வனே சிந்தித்து மனச்சுத்தி வாயிலாகத் தத்துவ ஞானமுண்டாக யோகபாவனை செய்பவர்தாம் பவப்பிணி யறக்கும் பான்மையின ராவ ரென்று சித்த மயல் மாண்டு சிதாகாச வடிவமாக விளங்கும் ஸ்ரீகரபாத்ர சிவப்பிரகாச சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வாறு யோகபாவனை செய்து வந்த யான் ஒரு நிமித்தம்பற்றி யிப்போது சித்திகளை விரும்பி ஸ்ரீசுப்பய்ய சுவாமிகள் செப்பியவாறு யோகபாவனைசெய்து, அதனைப் பெற்றேன்; பெற்றும் அது பூரணமானதன்றும். யோகிகள் யுக்தயோகி, யுஞ்ஞானயோகியென் றிருதிறத்தினராவர். சர்வபதார்த்தமும் ஏகாசமாய் எவனுக்கெப்போதும் பிரத்தியட்சமா யிருக்கின்றனனோ அவன் யுக்தயோகியாம். ஈசனே யுக்தயோகியாவன். எவனுக்குச் சிந்தனை செய்வது வாயிலாகப் பதார்த்த ஞானமுண்டாகின்றதோ அவன் யுஞ்ஞானயோகியாம். யான் யுஞ்ஞானயோகியே யன்றி யுக்தயோகியன்றும். யுக்தயோகியாவது எத்தன்மையோர்க்கும் முடியாததாம். யான் யுஞ்ஞானயோகியாயிருப்பதால், எனது சித்திபூரணமானதன்றும். யோகபாவனையை முன்னிட்டுச் சிந்தனை செய்யாதபோது எனக்கும் இங்குவாயிற்காக்கும் சிதானுக்கும் அறிவில் வேற்றுமை யின்றும். இவற்றை யெல்லாம் நன்குணர்ந்து மனோலபத்தின்பொருட்டே யோகபாவனை செய்வது தகுதியுடையதாம்; ஆயினும் நீயென்பொருட்டுச். சித்திகளை விரும்பியும் யோகபாவனைசெய்ய வேண்டும். அதனாலுனக் கொருபய னுண்மையி லின்றும்.

பது:—கடல் மடை விண்டாற் போன்று தத்துவோபதேசத்தைச் சாதுரியமாக வுபதேசித்த சற்குணி! தமது மதியின் மேன்மையைப்பற்றி வரையறுத்துக் கூறவது தமியேனுக்குவாய்ப்பதாமோ? தமதுபதேசத்தால் எனது மனம் பூரணமதிபோலச் சீதளமாகிவிட்டது. தாங்கள் கூறியவாறே யின்னும் யோகபாவனை செய்து சித்திகளைப் பெறமுயலுகின்றேன். அச்சித்திகளின் சொரூபத்தைத் தமியேனுக்கு விளக்கமாகக் கூறியருளுமாறு வேண்டுகின்றனன்; கடைக்கண்ணாற் பார்த்து நாயினுங் கீழ்ப்பட்ட வென் மீது கருணைசெய்யாவிட்டால், யானிப்பிறப்பின்பயனை யடைவதெவ்வாறும்?

சுடா:—(பெருமகிழ்வுற்று) பதுமாவதி! யான் கூறுவதைக் கவனமாகக் கேட்பாயாக; யோகபாவனையால் சித்திக்கும் ஐசுவரியம் எண்வகைத்தாம். அவை, (1) அணிமா, (2) மகிமா, (3) கரிமா, (4) லகிமா, (5) பிராப்தி, (6) பிராகாமியம், (7) ஈசித்துவம், (8) வசித்துவ மென்பனவாம்.

அணிமா:—சங்கற்பமாத்திரத்தால் பிரகிருதியை (சுபாவத்தை)க் கெடுத்தலால், பரமாணுவைப்போலத் தேகம் சூக்குமமாதலாம்.

மகிமா:—பிரகிருதியைப் பூரித்தலால் ஆகாய முதலிய வற்றைப் போலத் தேகம் மகத்தாதலாம்.

கரிமா:—மிகவிலேசாகவுள்ள பஞ்சுமுதலியன மலைமுதலியனபோலத் திண்மையுடையனவாதலாம்.

லகிமா:—மிகத்திண்மையாகவுள்ள மலை முதலியன பஞ்சுமுதலியனபோல மிகுலேசுடையனவாதலாம்.

பிராப்தி:—பூமியிலிருந்துகொண்டே விரல்நுனியால் சந்திரனைத் தொடுவது போலச் சர்வமும் எதிரே நிற்றலாம்.

பிராகாமியம்:—விரும்பியவாறு முடித்தலாம்; அது நீரில் முழுகியெழுதல்போலப் பூமியிலும்முழுகிஎழுதல் முதலியனவாம்.

ஈசித்துவம்:—பூதபௌதிகங்களை ஆக்கலளித்தலழித்தலைச்செய்யும் விசேடசாமர்த்தியமாம்

வசித்துவம்:—பூதபௌதிகங்களைச் சுவாதீனப் படுத்தலாம்.

பது:—சொற்சோர்வில்லாச் சுந்தரநங்காய்! அணிமா முதலியவற்றின் சொரூபம் இலக்கணவகையாகத் தாங்களருளியதால் நன்கு விளங்குகின்றது; இனி அவற்றை யான் யோகபாவனையைத் திடமாகச் செய்து பெற்றனுபவிக்க முயலுகின்றேன்; தங்கட்குச் சிரமங் கொடுத்ததுபற்றி மன்னித்தருளல்வேண்டும்.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி).

காலஞ்சென்ற அருளானந்த முதலியாருக்கு நடக்கவேண்டிய அபரக்கிரிகைகளெல்லாம் குறிக்கப்பட்ட காலங்களில் முடிந்துவிட்டன. ஒருமாதஞ் சென்றபின் ஜமீன்தாரின்மூத்த குமாரனாகிய சிசுபாலன் தனது உத்தியோக ஸ்தானத்துக்குப் புறப்பட்டுவிட்டான்; பூங்காவனத்தின் மாமியாரும் தன்னுடைய ஊராகிய இரத்தினபுரிக்குச் சென்றுவிட்டனள்; தமது நாயகிக்குண்டாகிய மனநோயை மாற்றும் நோக்கமாகவும் தேக சௌக்கியத்துக்காகவும் ஜமீன்தார் அவளையும் அழைத்துக்கொண்டு சுகவாசஸ்தானமாகிய நுவரெலியாவிலுள்ள தமது மாளிகைக்குச் சென்றுவிட்டார். பூங்காவனம் நாயகருடைய எண்ணத்துக்கு என்றும் மாறுபாடில்லாத உத்தமக் கற்பரசியாதலினால், அவருடைய ஏற்பாட்டை உவந்தேற்றுக்கொண்டாள். இவர்கள் அங்குச் சென்றிருந்த காலம் மாரிகாலமாக விருந்தது. இளவேனிற்பருவம், மரங்களைத் துளிர்களினாலும் புஷ்பங்களினாலும் நிரப்பி அலங்கரித்துக் கொம்பர்களை மூடியது. 1813௵ புரட்டாசி௴ முற்கூற்றில் இவர்களிருவரும் தங்கள் சுவர்ணமாளிகைக்குத் திரும்பிவிட்டார்கள்.

சிங்கைபுரஜமீன்தார் தம்முடைய மனவெண்ணம் முழுவதும் அனுகூலப்படவில்லையென்று எண்ணிக்கொண்டார். பூங்காவனத்தின் வதனத்திலுள்ள பேரழகு மீட்டும் காத்திராப் பிரகாரம் வந்துவிட்டாலும், உள்ளத்தில் நிலைபெறாக விருக்கும் துக்கத்தினால் முகத்தோற்றம் அவ்வளவு திருப்திகரமாக விருக்கவில்லை. அவளது தோற்றம் உறுப்புக்களின் திரட்சியையும் நீட்சிகளின் பங்குகளையும் சரிவரக்கொண்டு வந்தது. ஜமீன்தார் தம் நாட்டிற் கௌரவம் பொருந்திய சீமாட்டிகளுடன் பூங்காவனம் ஊடாடும் பொழுது தம்முடைய மனைவியே பெண்கள் நாயகமாகத் தோற்றுவாளென்று எண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தார். அதனால் இவர் என்ன ஏற்பாடுகள் செய்தாலும், நாயகியின் உத்தரவின்படியே செய்வார். மனைவிக்குமாத்திரம் இவர் தமது பெருமையையும் பிடிவாதத்தையும் அகங்காரத்தையும் காட்டுவதில்லை. அவளும் அவருக்கு இணக்கமாகவே நடந்துவந்தனள். இந்நாளில் இவரது மூத்தகுமாரன், பெரியதந்தையாரும் பெரியதாயாரும் நுவெ

ரெஸியாவிலிருந்து சிங்கைபுரத்துக்கு வந்துவிட்டார்களென்பதை அறிந்து அன்பான ஒருகடிதம் எழுதினான். இதனால் ஜமீன்தார் சந்தோஷப்பட்டுத் தாம்சமீபத்தில் நடத்தவிருக்கும் விசேஷக்கொண்டாட்டத்திற்கு வரும்படி பதில்கிருபம் அனுப்பினர். அதுகண்டவுடன் சிசுபாலன் அங்குவந்துவிட்டான். கொண்டாட்டத்துக்கு வரவேண்டிய பிரபுக்களும் சீமாட்டிகளும் வந்து விட்டார்கள். ஜமீன்தார் கொண்டாட்டத்தினத்தன்று நடுப்பகல் பன்னிரண்டுமணியளவில் ஒரு தந்தியை மனைவிகையிற் கொடுத்துவிட்டு அவசரமாக வெளியே சென்றுவிட்டார். பூங்காவனம் அதை வாசித்துப்பார்த்தவுடன் அறிவு மயங்கிக் கதிரையிற்சாய்ந்தாள்.

தந்தியிற் காணப்பட்ட விஷயம் யாதெனின், ஜமீன்தாரின் கண்டிப்பான கடிதத்தைக் கண்டபின் அவர் சகோதரரின் இரண்டாங் குமாரனாகிய அருட்பிரகாசம் அன்று இரவு விருந்துக் கொண்டாட்டத்துக்கு வருவதாக அறிவித்திருந்தான். அதைப்பார்த்தவுடன் பூங்காவனம் மயங்கிக் கதிரையிற் சாய்ந்தாள். சிறிது நேரஞ் சென்றபின் அவள் மூர்ச்சை நீங்கி எழுந்து மனத்தைரியங் கொண்டாளாயினும், விட்டுநீங்காத ஆலோசனையுடன் அவ்வறையில் இருந்தாள். அப்பொழுது ஜமீன்தார் அவ்வறைக்குள் வந்து இளையகுமாரனின் வருகையை அவளுக்குக்கூறிச்சந்தோஷத்தோடிருந்தனர். வந்தபிரபுக்களும் சீமாட்டிகளும் நடந்தும் வாகனதிகளிலிவர்ந்தும் ஜமீன்தாரின் அகன்று விசாலித்த நெடுந்தூரமுள்ளபிற்புறத் தோட்டங்களிற் சென்று நந்தனவன அலங்காரங்களைப் பார்த்து மகிழ்ந்து திரிந்தார்கள். அப்பொழுது பூங்காவனத்தின் முகத் தோற்றத்தை ஒருவாறு உற்று நோக்கின், முகம் இன்னும் வெளுத்திருப்பதையும் கண்களில் நூதனமான தோற்றத்தையும்காணலாம். இவைகளையெல்லாம் நாயகர் கவனித்திலர். அவளோ அதற்கு இரண்டு தினத்தின் முன் நாயகரின் பிரியநண்பரொருவர் உபகாரமாகக் கொண்டுவந்து கொடுத்த மயிலேறும் பெருமானின் திருவுருவம் தீட்டிய படத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஜமீன்தார் இருந்த ஆசனத்தினின்றும் எழுந்து சாளரத்துக்குப் பக்கத்தேபோய் நின்று பிரதானமாக அன்று வரவேண்டிய ஒருவிருந்தினரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றார். பிற்பகல் சரியாய் ஐந்துமணியளவில் அவ்வீட்டுக்கு முன்பாக ஒரு வாடகைவண்டி வந்து நின்றது. அதைக்கண்டபிரபு ஆ

கண்மணி! அவன் வந்துவிட்டான். அவனைக்கண்டு மூன்றுவருடமாயின என்று கூறிச் சந்தோஷ மிகுதியினால் ஆரவாரித்தார். பூங்காவனமோவெனின், முன்னிலும் அதிககவனமாய் அப்படத்தைப் பார்த்தபடியே யிருந்தாள். நாயகர் முன்னர்க் கூறியவைகளுள் ஒன்றும் அவள் செவியிலேறவில்லை. சிலநிமிஷம் சென்றவுடன் அவ்வறைக்குவெளியே சிலர் நடந்துவரும் காலடிச்சத்தம் கேட்டது. ஒருவேலைக்காரன் அங்கு ஓடிவந்து சின்ன எசமான்வருகின்றார் என்றூர்ப்பரித்தான்.

ஐந்தாம் அதிகாரம் முற்றிற்று.

ஆறும் அதிகாரம்.

பூங்காவனம் இருந்த ஆசனத்தினின்றும் எழுந்தாள். முன்னொருபோதும் கண்டிருக்க மாட்டானென்ற எண்ணத்தோடு அவளின் கரத்தைப் பற்றித் தம்முடைய இளையகுமாரனுக்குக் காட்டும்படி ஜமீன்தார் கொண்டுபோனார். அந்தோ! அவளோவென்றால் பால்போல வெண்மையடைந்திருந்தாள். அவளின் சரிந்து தொங்கவிடப்பட்ட சுருண்டகேசராசிகள் முகத்தை இன்னும் வெண்மையாக்கி விட்டன; அதரங்கள் சாம்பர் நிறமாய் விட்டன. அவள் சமீபத்தில்வந்த அருட்பிரகாசத்தை உவந்தேற்காது மௌனமாய் நின்றபொழுது கண்களுக்கு மாத்திரம் புதிய வெளிச்சத்தைக் கொடுத்தது. அவளின் இருதயத்துக்கூடாகச் சொல்லக்கூடாதவிதமான எண்ணங்கள் சடுதியாய் மாறிமாறி ஊடுருவி வந்து கொண்டேயிருந்தன. அவள்தானாகவே பயங்கரத்தையும் துக்கத்தையும் அடக்கிக் கொண்டாலும் முகம் எழிற்சியைக் காட்டிவிட்டது. நாயகர் பெருமையோடு அவளைக் கண்ணுற்றபோது இவ்வளவுவடிவுடையவளாக அவர்க்கு அவள் ஒருகாலும்தோற்றவில்லை; குமாரனாகிய அருட்பிரகாசத்தைக் கூர்ந்து பார்த்தார்; அவன் மதனைநிகர்த்த போழுகோடும் இருபத்துமூன்று வயதுடையவனும் காணப்பட்டான். விவேகம் நிறைந்து நேரே யுயர்ந்து வெளிறிய நெற்றியின்மேல் கருநிறம் பொருந்திய மயிர்கள் சுருள் சுருளாய்விளங்கி அலங்காரத்தைக் கொடுத்தன. அவனின் நீண்ட மெல்லியசரீரம் ஆண்தன்மை யுடையதாகத் தோற்றினாலும் தேகம் முழுவதும் ஒருவித வெளுப்படைந்திருந்ததாகத் தோற்றியது. ஜமீன்தாருக்குக் குமாரனின் இவ்வித மாறுபாடான தோற்ற-

அவ்வாறு விளங்கவில்லை. பூங்காவனத்தின்கண்ணுக்கு அவனுடைய கண்கள் எவ்வளவோ வித்தியாசமாகத் தோற்றியன. அவள் தன் ஒருவிதமான பார்வையால் தன்னைப்போல அவனுக்கு அமைதியானவும் ஆண்மையானவும் உள்ளுக்குள்ளான பயங்கரத்தோற்றம் இருந்ததாக இலகுவில் அறிந்தாள். அருட் பிரகாசம் பூங்காவனம் ஆகிய இவர்களிருவரும் தனித்தனியே தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கும் கவலை, கண்ணீர்களினால் வெளிக்காட்டி விடுமோ வென்று அஞ்சினார்கள். அவள் துக்கத்தை மிக்க தைரியமாய் அடக்கிக்கொண்டாளென்பதைக் கண்டவுடன், அவனின் பயங்காம்மாறியது. அது சந்தோஷமற்ற அவளின் வதனத்துக்கு மறுமொழிசைக்கினையாக (குறிப்பாக) அறிவித்ததுபோ விருந்தது.

அப்பொழுது ஜமீன்தார் குமாரனைப்பார்த்து அருமை மைந்தனே! நீ கோலாலம்பூருக்குச் சென்று அங்குவசித்தபோது சமுத்திரத்திற்கு இரையாகி இறந்துபோனாயென்ற வீண்துக்கசங்கதி அறிந்தபின்னர் நான் உன்னைக் காணவில்லை; காத்திரவாறு இப்பொழுது கண்டேன். அது நான் செய்த பூர்வபுண்ணியமே என்று கூறி, நாயகியைப்பார்த்து என் அருமைக் கண்மணியே! இற்றைக்கு ஒருவருடத்தின் முன் எங்கள் மூத்தகுமாரனாகிய சிசுபாலன் இங்குவந்தபோது எவ்வளவு அன்புடனும் ஆர்வத்துடனும் நடந்தாயோ அப்படியே இவனையும் கவனித்துநடந்துகொள் என்று கூறினார். இவர் இவ்வாறுகூறியது முன் மூத்தகுமாரனுக்கு நடந்தது போலவே இவனுக்கும் நடக்காததைக் கவனித்தே; அப்பொழுது பூங்காவனம் கடமைக்காக அருட்பிரகாசத்தைப் பார்த்துக் குமாரனே! உன்வரவு நல்வரவாகுக என்று மாத்திரம் கூறினாள். அவனும் அதற்குப் பதில் மரியாதை செய்தான். சிறிது நேரஞ்சென்றபின் ஜமீன்தார் மீட்டும் அவனைப்பார்த்து மைந்தனே! நீநேரே கோலாலம்பூரிலிருந்து தான் வருகின்றாயோ? மறந்துபோனேன்; ஒருவருடத்துக்குமுன் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்குவந்து சென்னை மாநகரைத்தரிசித்தபோது அங்கேவந்திருந்தநீ உனது இன ஜனபந்துக்களைத் கண்டுதரிசிக்க என்வரவில்லையென்றார். அருட்பிரகாசம் பெரியதந்தையே! நான் கோலாலம் பூரிலிருந்து இந்தியாவுக்குவந்தபோது இங்கே ஒருவருடம் வரையும் தங்கள் மத்தியில் வசிக்கவேண்டுமென்றே நினைந்துவந்தேன்; ஆனல் காத்திராவாறு, சென்னைக்குவந்த வேல்ஸ் இளவர

சர் கோலாலம் பூரையும் அதற்கடுத்த மற்றும் நாடுகளையும் பார்வையிட்டுவருதல் உத்தமமென நீதிச்செழுஞ்சபையார் வேண்டிக்கொண்டபடி அவர் அங்குப்போவதாகத் தீர்மானமாயிற்று. அதற்காகநான் அங்குஅவசியம் போகவேண்டியிருந்ததனால் இங்குவந்து தங்களைச் சந்திக்க முடியாமற் சென்றுவிட்டேன் என்று உத்தரம் கூறினான்.

அருட்பிகாசம் கூறியதைக் கேட்ட ஜமீன்தார் மைந்தனே! "ஒருவன் தன்னுடைய முயற்சியில் கவனமாயும் கீழ்ப்படிதலாயும் இருக்கின்றது நல்லதுதான்". ஆனால் தற்போது நீ இருக்கும் உத்தியோகத்தினும் பார்க்கக் கண்ணியமும் மேம்பாடுமுள்ள வேறொரு உத்தியோகத்துக்கு ஏற்பாடு செய்திருக்கின்றேன்; அஃதாவது கௌரவம் பொருந்திய மைசூர் வேந்தரவைக்களத்தில் அன்னார் பிரதான மந்திரியாய்ச் சார்ந்து இருக்கும் பெரும்பேறேயாகும். நீ அவ்வாறு செல்லுதற்கு ஆயத்தமுடையவனாயிரு; செல்லுங்காலம் பின்னர் அறிவிக்கின்றேன் என்று கூறினார். அப்பொழுது அவன் கைகூப்பிவணங்கி நன்றி கூறி என்மீது பேரன்பும் அபிமானமுங் கொண்டபெரியதந்தையே! நான் என்றும் நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன். தாங்கள் கூடிய சீக்கிரம் என்னை இந்தச்சிங்கை புரத்தினின்றும் புதிய உத்தியோகஸ்தானத்துக்கு அனுப்பிவிடும்படிவேண்டிக் கொள்ளுகின்றேன் என்றனன் அதற்கு அவர் நல்லது; இதுப்பற்றிப் பேசக் காலமிருக்கின்றது. நீ சிறிதுநாளைக்கு இங்கேதான் இருத்தல் வேண்டும் என்று கூறித் தமது குமாரன் நெடுந்தூரப் பிரயாணத்தினால் சிரமமடைந்திருக்கின்றானெனக் கருதி அழைப்புமணியை அடிக்க ஒருவேலைக்காரன் வந்துநின்றான். அப்பொழுது அவர் தமது குமாரனுக்காக ஏற்படுத்திய அறையிற் கொண்டுபோய் விடும்படி கட்டளை செய்தார். அவன் அழைத்துக்கொண்டுபோய் அருட்பிரகாசத்திற்காக ஏற்படுத்திய அறையைக் காட்டினான்.

மா-சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

பிழை திருத்தம்.

(1) பூங்காவனம் முதலாம் அதிகாரத்தில்—"சிங்கைபுர ஜமீன்தாரான மதிதயர் என்னும் மகா கௌரவம் பொருந்தியபிரபுவின் குமாரர்களான" என்பதை—"சிங்கைபுர ஜமீன்தாரின் தம்பியாராகிய மதிதயர் என்னும் பிரபுவின்குமாரர்களான" எனவும்,

(2) ஷை முதலாம் அதிகாரம் இரண்டாம் வசனத் தொடக்கத்தில் 1908ஹு என்பதை 1808 எனவும், திருத்திவாசிக்கும்படி நமதுவாசகர்களை வேண்டுகின்றோம்.

நெருப்புக் கோழி.

ஆப்பிரிக்காக் கண்டத்து நெருப்புக் கோழி உலகத்தில் காணப்படும் கோழிகளில் மிகவும்பெரியது. அது ஏழு அல்லது எட்டு அடி உயர மிருப்பதால், மனிதனிலும் உயரமானது. அதற்கு ஒட்டகைப் பட்சி யென்றும் பெயருண்டு. அதன் கால்கள் ஒட்டகையின் கால்கள் போல விருப்பதுபற்றி அங்ஙனம் பெயர் கொடுத்ததும்பொருந்தும். ஒட்டகம்போலவே உஷ்ணப்பிரதேசங்களில் நெருப்புக் கோழி வசிக்கும். அது கற்கள் ஆணிகள், மரத்துண்டுகள் அக்கினி, முதலிய வற்றையெல்லாம் தின்பதால், அதற்குத் தானியம் பழ முதலியவை எளிதில் சீரணிக்க ஏதுவுண்டாகிறது.

அதன் முட்டைகள் மிகப் பெரியவை. ஒவ் வொன்றும் மூன்று பவுண்டு நிறையுள்ளது. மேலும் இரண்டு டஜன் சாதாரணக் கோழி முட்டைகளி லடங்கிய சத்து நிறைந்தது. மணல் வெளியில் தோண்டுகிற துவாரங்கள் அல்லது பொந்துகள் தான் அதற்குக்கூடுபோல் உதவுகின்றன. அநேகமாய்ச் சூரிய வெப்பத்தினால் தான் முட்டைகள் குஞ்சு பொரிக்கின்றன; ஆனால் ஆண் பெண் என்ற இரு சாதிப் பட்சிகளும் கூட்டை மிகவும் பாதுகாப்பதோடு, இராக் காலங்களில் முட்டைகள் குளிர்ந்து போகாமல் அவற்றின் மேல் உட்கார்ந்து கொள்ளும். அநேக ஒட்டகைப் பட்சிகள் ஒரே கூட்டில் முட்டை யிடுவதுண்டு.

ஆப்பிரிக்காவில் பிரயாணஞ் செய்பவர் பெரும்பான்மையும் அதன் முட்டைகளைத் தின்பதுண்டு; தின்பதற்கு ஒரு முனையில் சிறுதுவாரஞ்செய்து மறு முனையை நெருப்பில் படும்படிவைத்து, உள்ளிருப்பதுகொதிக்கும்பொழுது அதனை ஒருகோலினால் கிண்டுகின்றார்கள். முட்டையின்மேலோடு பாத்திரம் போல் அவசரகாலங்களில் தண்ணீர்வைத்துக்கொள்ள உதவுகின்றது. ஆதலின் சில கொள்ளைக்காரர்கள் இவ்வோடுகளைச் சில விடங்களில் புதைத்து வைத்துவிட்டுச்சிலரை எதிர்த்துச்சாமான்களை எடுத்துக்கொண்டு ஓடுவார்கள். சாமான் இழந்தவர்கள் அவர்களைத்தொடர்ந்துவந்து வனாந்திரத்தில் தண்ணீர் அகப்படாததால் அநேகமாயிறந்து போவார்கள். ஆனால் கொள்ளைக்காரர்களோ புதைத்து வைத்திருந்த இடத்தை அறிந்து தண்ணீரை எடுத்துக்குடித்து விடுவார்கள்.

அதன் கால்களில் மிகவும் கூர்மையான நகங்களுண்டு. ஆகையால் அது வேட்டைக்கு வருபவர்களை யாவது அல்லது நாய்களை யாவது பலமாகக் காயப்படுத்தும்; எப்பொழுதும் கால்களால் கழுதையைப் போன்று பின்பக்கம் உதையாமல் முன் பக்கம் உதைக்கும். பழகின பட்சிகள் எஜமானனுக்காக எதிரிகளைக் காயப்படுத்தும். அது இரவில் பெரும்பான்மையும் சத்தமிடுவது சிங்கத்தின் கர்ச்சனைபோலவே யிருக்கும். எவ்வளவு பழகிய வர்களுங்கூடச் சிற்சில சமயங்களில் இதன் சத்தத்தைச் சிங்கத்தின் கர்ச்சனையோ என்று ஸந்தேகிப்பார்கள்.

அதனிடம் மிக அழகானதும் விலையுயர்ந்தது மான இறகிருப்பதால், அநேகர் அதை வேட்டையாடிக் கொல்லுகின்றனர்; சுதேசிகள் விஷந்தடவிய அம்புகளால் கொல்லுகிறார்கள்; கூட்டின் சமீபத்தில் சிலர் ஒளித்திருந்து அது முட்டையிடவாவது, முட்டை குளிராமல் மேலுட்கார்ந்து பாதுகாக்க வாவது வரும்பொழுது கொல்லுகிறார்கள். சிலர் அதன்தோலைப் போர்த்துக் கொண்டு அப்பட்சிகளைப் போலவே அவற்றின் கூட்டத்தில் புகுந்து ஒவ்வொன்றாய் விஷமுள்ள அம்புகளால் அநேக கோழிகளைக் கொன்று விடுகிறார்கள். வேறு சிலர் விரைவாய் ஓடக்கூடிய குதிரைகளி லேறி அப்பட்சிகளை வேட்டையாடு கிறார்கள். அவை மிக வேகமாய் ஓடி மானாலும் நேராய்ப் போகாமல், வளைந்து வளைந்தே போகும் சுபாவ முள்ளவை. அதனால் வேட்டைக்காரர் குதிரைகளை நேராகவே ஓடச் செய்து அப் பட்சிகளின் ஓட்டத்தைப் பிடித்து அவற்றைக் கொன்றுவிடுகிறார்கள். அப்பட்சிகளை முற்றிலும் களைப்படையச் செய்து ஓட்டத்தைப் பிடிக்க, சிலர் அநேக நாட்கள் சிரமப் படுவார்கள்.

அதன் மாமிசம் உணவுக்கு உதவுகிறது. கிழப் பட்சிகளின் மாமிசம் அவ்வளவு சிறந்ததல்ல. ஆண்பட்சிகளின் நிறம், கறுப்பு, பெண் பட்சிநிறம் ஒருவிதச் சாம்பல் நிறமானது. அவற்றின் வால் பக்கமுள்ள வெள்ளை இறகுகளை ஐரோப்பிய மாதர்கள் மிகுந்த பொருள் கொடுத்து வாங்கித் தரித்துக் கொள்கிறார்கள். அநேக நூற்றாண்டு களுக்கு முன்னமே, ஜனங்கள் ஒட்டகப் பட்சியை அறிந் திருக்கிறார்கள். பூர்வீக உரோம தேசத்தார் அதன் மாமிசத்தை உணவாக உபயோகித்தனர். ஒரு சமயம் அதன்தலையில் ஒருபாகத்தை எடுத்துத் தின்பதற்காக, அறுநூறு பட்சிகள் கொல்லப்பட்டன வென்று சொல்லப் படுகிறது.

நெல்லை - மாணிக்க வாசகன்.

நன்றி மறவேல்.

ஜன சஞ்சாரமில்லாத ஒரு வனத்தில் முனிவர் ஒருவர் தவஞ் செய்துகொண் டிருந்தார். தற்செயலாய் அங்கே வந்த ஒரு நாய் அவரைக் கண்டு அவரிடம் வாலை யாட்டிக்கொண்டு நின்றது. முனிவர் அதன்மீது இரக்கங்கொண்டு அதைத் தடவிக்கொடுத்து அதனுடன் பழகிவந்தார். பிறகு அந்த நாயானது நாடோறும் பகலில் தன் ஆகாரத்தைத் தேடிக்கொண்டு திரிவதும் இரவில் முனிவரது ஆச்சிரமத்திற்குவந்து அதைப் பாதுகாத்து வருவது மாக விருந்தது. அதனால் அந்த முனிவருக்கு அந்த நாயின் மீது அதிக அன்பு ஏற்பட்டது. நாய் தனக்கு முனிவரது ஆதீனம் கிடைத்திருப்பதுபற்றி அந்த வனத்திலுள்ள மற்ற விலங்குகளை இலக்ஷியஞ்செய்யாமற் சஞ்சரித்து வந்தது.

இவ்வாறு கர்வங்கொண்டு திரியும் நாயைக் கண்ட ஒரு புலி சினங்கொண்டு அதைக் கொல்ல ஓடி வந்தது. அதைக் கண்ட நாய் பயமடைந்து முனிவரிடம் ஓடிவந்தது. முனிவர் நாய்புலிக்குப் பயந்து ஓடிவந்திருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொண்டு உடனே தமது தபோமகிமையால் நாயை, அதை யெதிர்த்தோடிவரும் புலியினும் பெரிய புலியாக்கினர். அதுகண்டதும் புலியானது பயந்து ஓடிப்போய் விட்டது. அன்றுமுதல் அந்நாயானது புலிரூபமாகவே இருந்துவிட்டது. பிறகு அது நாயாயிருந்த போது கொண்ட கருவத்திலும் அதிகமான கருவங் கொண்டு எதிர்ப்பட்ட மிருகங்களைக் கொன்று தின்று வந்தது. அதைப் பொறுக்காத ஒரு யானை அந்தப் புலியைக் கொல்லவந்தது. இப்போதும் இந்தப்புலியானது முன்போல் பயந்து முனிவரிடம் ஓடி வந்தது. முனிவர் அந்தப் புலியை, எதிர்த்து வரும் யானையை யடிக்கத்தக்க ஒரு பெரிய யானையாக்கினர். அந்தப் பெரிய யானையைக் கண்டதும் நிஜயானை பயந்து வந்த வழியே திரும்பி விட்டது.

அப்பால் அந்த யானை நிர்ப்பயமாய் அந்தக் காட்டில் அலைந்து திரிந்து கொண்டு முன்னிலும் பதின்மடங் கதிகமான பிராணிகளை இம்சித்து வந்தது. அதைப் பார்த்துச் சகிக்காத சிங்க

மொன்று அதனை யெதிர்த்தது. சிங்கமானது உருவத்தில் யானையை விட மிகச் சிறிய தெனினும் ஒருபெரிய யானையை மத்தகத்தின் மேலறைந்து கொல்லும் வல்லமை யதற்குண்டு. அதனால் யானை தன் கனவில் சிங்கத்தைக் காணினும் இறக்கு மென்று சொல்வதுண்டு. ஆகவே இந்தப் போலியானை நிஜமான சிங்கத்தைப்பார்த்ததும் கதறிக்கொண்டு முனிவரிடம்ஓடிவந்தது. முனிவர் அது ஓடி வந்ததன் காரணத்தையறிந்து அதையொரு யாளியாக்கினார். யாளி யென்னு மிருகத்திற்குச் சிங்கத்தை ஒரு அறையால் கொல்லத்தக்க வல்லமை யுண்டு. ஆதலால் யாளியைக் கண்டதும் சிங்கம் தான் தப்பவழி தேடிக்கொண்டு ஓடிப் போய் விட்டது.

ஒரு சிறிய நாயா யிருந்தது இப்போது எந்த மிருகங்களையும் கொல்லவல்ல ஒரு யாளியாக வல்லவா இருக்கிறது? உலகத்தில் சில அற்பர்கள் ஐசுவரியம் வாய்க்கப் பெறுவார்களாயின், தங்கள் மனம் போன போக்கில் நடந்து கர்வங் கொண்டு தகாத காரியங்களையுஞ் செய்து கடைசியில் கெடுவதுண்டு. அதுபோல் அற்ப நாயாயிருந்த இந்த யாளியும் மிகுந்த கர்வங்கொண்டு "நாமிப்போது யாளியா யிருக்கின்றோம்; நம்மை யெதிர்ப்பார் ஒருவருமே யில்லை; நம்மை பொருசமயம் இம்முனிவர் முன் போல் செய்து விட்டால் நாமென்ன செய்கிறது; நாம் இம்முனிவரைக் கொன்று விடின் எப்போதும் யாளியாகவே யிருக்கலாம்; இதைத் தவிர வேறுமார்க்க மில்லை" என்று கருதி முன்பு முனிவர் நன்றி செய்ததையும் மறந்து, அவரைக் கொல்லச் சென்றது. அதை யறிந்த முனிவர், அந்த நாயாகிய யாளி தம்மருகேவரும் வரையில், மௌனமாக விருந்து நகைத்து, வா! வா! பழையநாயே! "என்றார். அக்கணமே அந்த யாளிவுருவமமைந்த நாயானது வேகமடங்கிப் பழைய நாயாகி விட்டது.

பிள்ளைகளே! இந்த நாய்க்கேன் இக்கதி வந்தது? தனக்கு நன்றி செய்த முனிவர் பெருமானுக்குத் தீங்குசெய்யக் கருதியதனாலல்லவா? ஆதலின் நன்றி செய்தவரை மறந்து அவர்க்குக் கேடு நினைப்பவன் கெடுவானென்பதுதிண்ணம். இதுபற்றியே ஔவைப் பிராட்டி யாரும் "நன்றிமறவேல்" என்று நமக்குப் போதித்துள்ளார். நீங்கள் இதை யறிந்து நடப்பீர்களாக.

செல்வத்தின் சிறுமையும் கல்வியின் பெருமையும்.

இப்பூவுலகின்கண் தோன்றியஆன்மகோடிகள் பலவற்றுள்ளும் கிடைத்தற் கரிதாகிய மானிடப்பிறவியை யடைந்த ஒவ்வொரு

வரும் தேடவேண்டும் பொருள்கள் இரண்டு. அவை கல்விப்பொருளும் செல்வப்பொருளுமாம். கல்விப்பொருளாவது அறம், பொருள், இன்பம் வீடு என்னும் உண்மைப் பொருளை அறிவிக்கும் நூற்களை கற்கவேண்டிய முறைப்படி, “கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக” என்று பொய்யா மொழிப் புலவர் கூறியவாறு கற்று அதன்படி ஒழுகுதலேயாம். செல்வப் பொருளாவது நிலம், வீடு, வாசல், இரத்தினம், பொன், வெள்ளி முதலியவைகளாம். இவ்விரு பொருள்களில் முதலாவதான கல்விப் பொருளைத் தேடிக் கொள்வதே பெரிதும் பயனளிக்கக் கூடியதாகும்; அதனாலேயே தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய கடமையில் கல்விப் பொருளைத் தேடிவைப்பது முதற் கடமையென்றும், முக்கியமானதென்றும், ஆன்றோர் கூறியுள்ளார். அதற்குக் காரணம் செல்வப் பொருளைத் தேடவும், தேடிய பொருளைக் காப்பாற்றவும், அப்படிக் காப்பாற்றியது குறைவு படாமலும், கெடாமலும் செய்து கொள்வதிலும் துன்பமே தோன்றுமல்லால் இன்பமனுவளவேனுமில்லை; பிறர்க்கு மனதாரக் கொடுத்தாலும் கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே போகும் என்பதேயாம்.

“துப்புரு பொருளினைத் தேடல் துன்பமாங்
கைப்பொரு ளுண்டெனிற் கருத்து மோகமா
மப்பொரு ளழிந்திடும் போது மல்லலா
மெப்பொழு தேபொரு ளின்ப மாவதே” எனச் சிவப்

பிரகாச சுவாமிகளும்,

“இயக்குறு திங்க ளிருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடிமின் வானவர் கோனைப்
பெயக்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே”.

யெனத் திருமூலரும், கூறுவதிங்கு நன்குணர்தற் பாலதாம். அன்றிச் செல்வம் பங்காளிப், பகைவர், வலியோர், திருடர், அரசர் முதலியவர்களால் கைப்பற்றப் படுவதோடு அக்கினி ஜலம் முதலியவைகளாலும் இலகுவாய் அழிந்து விடக் கூடும்.

கல்விப் பொருளோ! அப்படிக்கன்றி வெள்ளத்தினாலாயினும், அக்கினியினாலாயினும், அரசராலாயினும், கள்வராலாயினும் கவருதல் முடியாது. இதற்குச் சான்றாகவே

“வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்தராலும், கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது, கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு மிகவெளிது கல்வி யென்னும், உள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருள் தேடி யுழல்கின்றீர்”,

யென ஆன்றோரும் கூறி யுள்ளார். தவிர, ஒரு விளக்கினின்று பல விளக்குகளும், பல விளக்குகளி னின்று பற்பல விளக்குக ளும் ஏற்றப்பட்டு விர்த்தியாவது போலக் கல்வியைப் பிறர்க்குக் கொடுக்குந் தோறும் (போதிக்கும்போ தெல்லாம்) அது விருத்தி யாகிக் கொண்டே வரும். இஃ துலகானுபவமே!

நம்முடைய முகத்தில் இரண்டு கண்களிருந்த போதிலும் ஆகாயத்தில் சூரியன் பிரகாசித்தா லொழிய நிலங்களி லுள்ள பல பொருள்களையும் காணுத லரிதாவது போல, உயர்குலத்தில் பிறந்து அழகும் அதிக செல்வமும் அறிவும் பெற்றிருந்த போ திலும் கல்வி கற்றுணராதவர்க்குப் பாவம், புண்ணியம், இம்மை, மறுமை முதலியவைகள் தெரியா. தவிர, கல்வி யில்லாதவர். மணமில்லா முருக்கம் பூவுக்குச் சமமாகவும் யாவராலும் கருதப் படுவர். யாவர்க்கும் கல்வி புதைபொருளாயும், துணையாயும், கீர்த்தி, போகம், செல்வம், முதலியவைகளைத் தருவதாயு மிருப் பதால் கல்விக்குச் சமானமான பொருள் இவ்வையகத்தில் இல் லவே இல்லை. இதன் உண்மை

"கல்வியே யாவர்க்கு மொளிகொண்ட வடிவமாங்
கல்வியே புதையலாகுங்
கல்வியே பரதேச கமனவின மாகுமக்
கல்வியே துணையதாகுங்
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தி யைத்தருங்
கல்வியே பெருமையாக்குங்
கல்வியே வேண்டுநற் போகங்க ளைத்தருங்
கல்வியே யின்பமாக்குங்
கல்வியே நிலைகொண்ட கற்பகத் தருவதாங்
கல்வியே செல்வமாகுங்
கல்வியே யரசராற் பூசைசெய் விக்குமக்
கல்வியே கடவுள்காட்டுங்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
கருதிடினு மில்லையில்லை
கல்லா னெனைத்தொன்று மில்லா நடக்குமிரு
காற்பசுவ தென்பர் மாதோ". என்பதனாலும்,

'கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே" எனத் திருமந்திரம் கூறுவதனாலும் நன்கு விளங்கும்.

வி. சாட்சிநாதன்
போஸ்டு மாஸ்டர், திருப்புறம் பியம்.

வர்த்தமானம்.

எட்ரியா நோபிலின் கோட்டைச்சாவி.

(1) துருக்கியிலுள்ள, எட்ரியா நோபில் நகரத்துக்கோட்டையின் சாவி 13 இஞ்சு நீளமுடையதாம். அஃதிப்போது பெர்லின் நகரத்து ஆயுதசாலையில் பத்திரப் படுத்தி வைக்கப்பட் டிருக்கின்றதாம்.

பினங்கில் பிச்சை எடுப்பது கூடாது.

(2)பினங்கில் ஓர் இந்துக் கிழவனும் அவன் மகனும் பிச்சையெடுத்தன ரென்று கைது செய்து கோர்ட்டில் நிறுத்தப்பட்டனர். அவர்களிடத்தில் 13-ரூபாயும் நாலரைச் செண்டு மிருந்தன. அவர்கள் இந்தியாவிற் கனுப்ப ஜெயிலில் வைக்கப்பட் டிருக்கின்றனர்.

மேய ருத்தியோகத்துள்ள ஒரு கறுப்பர்.

(3) இங்கிலாந்து தேசத்துள்ள பாட்டர்சி என்னும் நகரத்திற்கு மேயராக ஆர்ச்ச ரென்னுமொரு கறுப்பு மனிதர் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். அங்குக் கறுப்பு மனிதரை மேயராக நியமித்தது இதுகாறு மில்லை; இதுவே முதல் முறையாம்.

சுழல்பங்களாக்கள்.

(4) மியூனிச் என்னும் நகரத்தில் தோட்டங்களின் மத்தியில் சுழல் பங்களாக்கள் கட்டப்பட் டிருக்கின்றன. அவை சுழல் நாற்காலிபோல எந்தப்பக்கம் வேண்டு மானாலும் திரும்புமாம்.

பண்டிதப் பரிசு.

(5) சுவீடன் தேசத்து நோபில்ஸ் பிரைஸ் இவ்வருஷம் பண்டித ரவீந்திரநாத் டாகோருக்குக் கிடைத்தது. இப்பண்டிதப் பரிசினை இந்துக்களுள் ஒருவரும் இதுகாறும் பெறவில்லை.

ஈயச் சுரங்கம்.

(6) சையாம் தேசத்திலுள்ள திராங் என்னு மிடத்தில் ஈயச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன; அவற்றி லிருந்து இப்போது மாத மொன்றிற்கு 600 பிக்கல் நிறையுள்ள ஈயம் ஏற்றுமதி செய்யப்படு கின்றதாம்.

ஒரு கிழமணம்.

(7) இந்தியாவின் வைசிராயா யிருந்த லார்ட் எல்ஜின் ஒரு சப்பல் காப்டன் விதவையை யிப்போது விவாகஞ் செய்து கொண்டாராம். இவருக் கிப்போது 65 வயதிருக்கும். இவர் மனைவியார் 1909-வது வருஷத்தி லிறந்து போனர். இவருக்கு 4 பெண்களும், 6 பிள்ளைகளு மிருக்கின்றனர்.

ஒரு பிரமாண்டமான எலும்புக் கூடு.

(8) கிழ் ஆப்பிரிக்காவிலுள்ள ஜர்மனுக் குரிய டெண்டாகு வென்னு மிடத்தில் சுமார் 160 அடி நீளமும் 22 அடி உயரமுமுடைய ஒரு மிருகத்தின் எலும்புக்கூடு அகப்பட்டிருக்கின்றது. அம்மிருகம் மனித னுண்டாவதற்குப் பல கோடி வருஷங்களுக்கு முன்னே பிறந்திருக்க வேண்டுமென்றும், தவளையைப்போல நீரிலும் நிலத்திலும் சஞ்சரிக்கும் பிராணி யென்றும், அதன் பற்களால் அது சாகபட்சணி யென்று தெரிகின்ற தென்றும், அதனது மூளை மனிதனது கைப்பிடி யளவுடைய தென்றும் சொல்லப்படு கின்றன.

கால்வாயில் கிடைத்த முத்துச்சிப்பி.

(9) இந்தியன் ஓர்ல்ட் பத்திராதிபர் மிஸ்டர் பிருதிவி சந்திரராயின் மனைவியார் ஊல்பூரில் ஒரு கால்வாயில் ஸ்நானஞ் செய்த போது அதில் அவர்க்கொரு முத்துச் சிப்பி கிடைத்தது; அதனை அவர் உடைத்துப்பார்த்தபோது அதி லிரண்டு விலையுயர்ந்த முத்துக்க ளிருந்தன.

ஒரு விநோத முருங்கை.

(9) புதுவை - சேவிய மேட்டிற்குத் தெற்கே யுள்ள ஒரு சிறு கிராமத்தில் முருங்கை மர மொன்று சூரியகாந்திப் பூ அளவுடைய ஓரே பூப் பூத்து வருகின்றதாம். ஒவ்வொரு நாளும் பூ காலையில் தோன்றி மாலையில் பலபல வென்று உதிர்ந்து விடுகின்றதாம்.

நாய் வரி.

(10) அலகபாத் முனிசிபா லிடியார் தம்மெல்லைக்குள் நாய் வளர்ப்பவர்க்கு நாய் ஒன்றுக்கு வருஷத்தில் 3 ருபாய் வரி விதிக்கத் தீர்மானித் திருக்கின்றனர்.

கதாசரித் சாகரம்.

இதன் டிம்மி 8 பேஜ் அளவில் 240 பக்கங் கொண்ட முதல்பாகம் வெளியாய் விட்டது. விலை ரூபாய் 1—4—0.

இது சம்ஸ்கிருதத்தி லிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது; இதுகாறும் தமிழில் வாராதது; படிக்கப் படிக்கப் பரமாநந்தமா யிருக்கும். இதிலிருக்கும் கதைகளின் போக்கு இதுகாறும் கேட்டிராத நவநவமான யுக்திகளுடன் கூடியதா யிருக்கும்; பாரசீகக்கதைகளும், அராபிக்கதைகளும், ரெய்னால்ட்ஸ் நாவல்களும் இதற்கிணையாகாவென்று கூறலாம்; இதனைப் படிக்க ஆரம்பித்தால் முற்றிலும் படிக்கத்தான் செய்யும்; இதன் பெயருக்கேற்பக் கதைகள் சாகரம் போலவே யிருக்கும்.

கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கொண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கி யிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய் மலர்ந்தருளப் பட்டது. இப்பரத கண்டத்தின் வடமேற்கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப் பட்டது இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமாநந்தத்தைப் பயப்பிப்ப தாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லன வெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக்கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும். இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது. இச்சஞ்சிகை வாங்குபவர்கள் இதன் முதல் வருடத்துப் பிரசுரமாகிய மேற்குறிப்பிட்டிருக்கும் கதாசரித் சாகரத்தின் முதற் பாகத்தை வாங்கி னூற்றான் கதைத் தொடர்ச்சி தெரியும்.

சந்தாவிவரம்.				வெளித்தேசத்திற்கு			
வருஷம் 1-க்கு	ரூ. 1	0	0	வருஷம் 1-க்கு	1	8	0
ஆறு மாதத்திற்கு	0	10	0	ஆறு மாதத்திற்கு	0	14	0
தனிப்பிரதி	0	2	0	தனிப்பிரதி	0	3	0

மானேஜர், லோகோபகாரி ஆபீசு,

கோமளீசுவரன் பேட்டை, சென்னை.